**OS.No.21/2023, Dated 09.10.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 9th day of October 2025.

**பி.வா.சா.1 – ராமகிருஷ்ணன் த/பெ.செங்கல்பநாயுடு வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தற்சமயம் ஆணைபோகி கிராமத்தில் வசித்து வருகிறேன். 2ம் பிரதிவாதி சீனிவாசன் எனது மகன் ஆவார். வாதிகள் என்னுடைய நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள் என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கை சர்வே எண்.111/4ஏ ல் உள்ள கிணற்றிற்காக கதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுடைய நிலத்திற்கு அருகில் சர்வே எண்.111/4பி, 113/1, 113/2, 113/4 ஆகிய என்னுடைய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 111/4ஏ க்கான பட்டா 1ம் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கும் எங்களுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் கிணறு மற்றும் வரப்பு சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. அந்த கிணற்றில் மின் இணைப்பு உள்ளது என்றாலும், அது 1ம் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.111/4 பி ல் உள்ள கிணற்றிற்கு என் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.111/4 பி ல் உள்ள நிலம் கிணறு, மின் இணைப்பு ஆகியவற்றை எனது பேரன் அனில்யோகேஷ் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவிட்டேன் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண். 111/4ஏ மற்றும் சர்வே எண்.111/4 பி ல் உள்ள கிணற்றை குறிப்பிடவில்லை என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் குறிப்பிடவில்லை. சர்வே எண். 111/4 ஏ ல் தான் கிணறு உள்ளது என்பது தான் வாதிகள் தரப்பு வழக்கு என்றால் சரிதான். சர்வே எண். 111/4 ஏ மற்றும் சர்வே எண்.111/4 பி ஆகியவற்றில் சேர்ந்தார் போல் கிணறு உள்ளது என்பது தான் எங்கள் தரப்பு வழக்கு என்றால் சரிதான். வாதிகள் எந்த சர்வே எண்ணில் கிணறு உள்ளது என்பதை தெளிவு படுத்த வேண்டுமென்று

வழக்கறிஞர் ஆணையர் நியமனத்திற்கு மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த மனுவை ஆட்சேபணை செய்து எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் ஆணையர் கட்டணம் செலுத்த வில்லை என்று அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுப்படி ஆணையர் சொத்தை பார்வையிட்டிருந்தால் எந்த சர்வே எண்ணில் கிணறு உள்ளது என்று தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு கிணறு சர்வே எண்.111/4 ஏ ல் உள்ளதாக குறிப்பிட்டுவிடுவார் என்று தான் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி 60 வருடங்களுக்கு முன்பு நானும் 1ம் வாதியும் சேர்ந்து கிணறு தோண்டியதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நானும் 1ம் வாதியும் அந்த சமயத்தில் ஒற்றுமையாக இருந்ததால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நானும் 1ம் வாதியும் சேர்ந்து கிணறு எடுத்ததாக நான் பொய்யாக சொல்வதால் தான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிணறு எடுத்ததிலிருந்து நானும் வாதியும் அவரவர்கள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.111/4 பி ல் உள்ள கிணற்றிலிருந்து மட்டும் தான் நீர் பாய்ச்சிகிறேன் என்றால் சரியல்ல. அது பள்ளமான இடமாகும். பள்ளத்திலிருந்து மேட்டிற்கு நீர் பாய்ச்ச முடியாது என்பதால் தாவா கிணறிலிருந்து தான் நீர் பாய்ச்சுவேன். தாவா கிணறு வளமான கிணறு என்பதால் நான் சட்டப்புறம்பாக அதில் உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிணறு எங்களுடைய நிலத்தில் உள்ளது என்பதற்கு அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா கிணறில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று நான் சட்ட நடவடிக்கை எதுவும்

எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் தாவா கிணறு எங்களது உரிமை குறித்து நான் எதிர்கோருரிமை கோரவில்லை என்றால் சரிதான். அதனால் தான் வாதிகள் உரிமை விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா கிணற்றின் சுவரை நான் இடிக்க முயன்றதால்தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றாலும், எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.10.09 18:27:11 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்